TNTR270027812025



நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொன்னேரி

முன்னிலை திருமதி. S. மஞ்சுளா, எம்.எல்.,

2026– ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ம் தேதி நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.237/2025

குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106ன் படி விவரங்கள்

| வ.எண். | | | |
|---|---|---|---|
| 1 | வரிசை எண்/ வழக்கு எண். | CC.No. 237/2025 | |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சோழவரம் காவல் நிலைய குற்ற எண். 233/2021 | |
| 3 | பெயர் | விஜயகுமார் (எ) விஜய் | |
| 4 | தந்தையின் பெயர் | த.பெ. சுந்தரமூர்த்தி | |
| 5 | தொழில் | – | குற்றம்சாட்டப்பட்டவரின் விவரம் |
| 6 | குடியிருப்பு | எண். 1/127, அம்பேத்கர் தெரு, கும்மனூர் கிராமம் சென்னை 67. | |
| 7 | வயது | எ1– 40 (2021 ன் படி) | |
| 8 | சம்பவ தேதி | 16.03.2021 | |
| 9 | முறையீடு தேதி | 16.03.2021 | |
| 10 | கைது தேதி | 17.03.2021 | |
| 11 | பிணையில் விடுவித்தல் | 26.03.2021 | |

| | | | |
|---|---|---|---|
| | தேதி | | |
| 12 | ஒப்படைத்தல் / அனுப்பிவைத்த தேதி | – | |
| 13 | விசாரணை துவக்க தேதி | 9.04.2026 | |
| 14 | விசாரணை முடிந்த தேதி | 09.06.2026 | |
| 15 | தண்டனை அல்லது தீர்ப்பு தேதி | 03.07.2026 | |
| 16 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு தேதி | 03.07.2026 | |
| 17 | காலதாமத்தின் விளக்கம் | போலிசாரால் எதிரிக்கு மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் | |

இந்த வழக்கு 20.08.2025 –ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வி. விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இறுதி விசாரணைக்காக 09.06.2026 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, இது நாள் வரை நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கின் ஆவணங்களை

பரிசீலனை செய்து, இரு தரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**தீர்ப்புரை**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

கடந்த 16.03.2021ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் சாட்சி 1 புவனேஷ்வரி என்பவரி தனது வீட்டின் குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தபோது அந்த குளியலறையின் பின்புறம் உள்ள இரும்பு தகட்டில் உள்ள ஓட்டை வழியாக எதிரி விஜயகுமார் குற்ற எண்ணத்துடன் தனது செல்போன் மூலம் குளியல் காட்சிகளை படம் பிடித்துள்ளார் என்றும், அதனால் அதிர்ச்சியடைந்த சாட்சி 1 உறக்க உத்தியவுடன் எதிரி தன் வீட்டிற்கு ஓடி விட்டார் என்றும், அதைப்பற்றி கேட்டபோது திமிராக பதில் அளித்து கொன்றுவிடுவதாக மிரட்டிச்சென்றார் என்று எதிரி மீது இதச பிரிவுகள் 354(C),506(1) படி தண்டிக்கப்பட வேண்டியவர் என சோழவரம் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். இதுவே அரசு தரப்புவழக்கின் சுருக்கம்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு பிரிவு 207 கு.வி.மு.ச சட்டப்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி மீது சுமத்தப்பட்ட

குற்றச்சாட்டின் தன்மைக்கு ஏற்ப எதிரி மீது இதச பிரிவு 354(C),506(1) கீழ் குற்றச்சாட்டினை விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி தாம் குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 5 வரை விசாரணை செய்யப்பட்டும் மற்றும் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 6 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:-**

அசா 1 புவனேஷ்வரி என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 2021ம் வருடம் மாலை சுமார் 5.00 மணியளவில் குளியலறையிலிருந்தபோது யாரோ ஒரு நபர் பார்ப்பதுபோல் இருந்தது என்றும், வெளியே வந்து பார்த்தபோது அங்கு ஆஜர் எதிரி இருந்தார் என்றும், அவர் மீது புகார் அளித்தேன் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும், புகாரிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் **புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது** சாட்சியம் அளித்துள்ளார்.

6. அசா 2 முதல் அசா 4 வரையானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளிக்காததால் அவர்களை பிறழ் சாட்சிகளாக அறிவித்து குறுக்கு விசாரணையிலும் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

7. அசா 5 காவல் ஆய்வாளர் கிளாஸ்டின் டேவிட் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 16.03.2021ம் தேதி மாலை 18.30 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் ரகுராமன் நிலைய அலுவலிலிருந்தபோது புகார்தாரர் புவனேஷ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று குற்ற எண்.233/2021ல் இதச பிரிவுகள் 354(C), 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சிகள் 1,2,5,6 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் 19.00 மணியளவில் பட்டியல் சாட்சி 3,4 முன்னிலையில் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், **வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அசா.ஆ. 3,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை தேடி வந்த நிலையில் 17.03.2021 காலை விஜயநல்லூர் டோல்பிளாசா அருகே 12.00 மணியளவில் எதிரியை கைது செய்து அவரிடமிருந்து செல்போன் ஒன்றை 12.30 மணிக்கு சாட்சிகள் 3,4 ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார் என்றும், **படிவம் 91 அசா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** மேல் விசாரணைக்காக கோப்பினை தன் பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கில் தடய அறிவியல் துறை இயக்குனர் வத்சலா என்பவரை விசாரித்து அவர் VIVO 1714 Model cell phoneஐ ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து விசாரணை செய்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அந்த தடய அறிவியல் பரிசோதனை அறிக்கை அசாஆ 6 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச 313(1) (b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிபோது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனக் கூறினார்.

## 9. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை

இவ்வழக்கில் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 354(C),506(1) கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும். அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் பட்டியல் சாட்சியில் 4,7,8ஆகியோர்களை விசாரிக்க தேவையில்லை என்று மேலெழுத்து செய்துள்ளார்.

## 10. சாட்சியங்கள் மீதான ஆய்வு

இரு தரப்பு வாதங்களும் பரிசீலனை செய்யப்பட்டு மற்றும் சான்றாவணங்கள் கவனமாக சீர்தூக்கி பார்க்கப்பட்டது.

11. அ.சா. 1 வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரர் புவனேஷ்வரி ஆவார். அவர் எதிரி மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டு முழுவதுமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது எதிரியின் செல்போன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற படிவம் 91 அசாஆ 5 மூலுமாக தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தியபோது அதில் எந்தவிதமான ஆபாசமான புகைப்படங்களும் காணப்படவில்லை. குறிப்பாக புகார்தாரர் குளிக்கும் சமயத்தில் எடுக்கப்பட்டதாக சொல்லப்படும் பதிவுகள் எதுவும் காணப்படவில்லை என்று அசாஆ 6 ன் மூலம் தெரிய வருகிறது. மற்ற சாட்சிகளும் தங்களுக்கு வழக்கு குறித்து தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படாமல் உள்ளதால் அவர் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

**முடிவாக, எதிரி மீதான இதச பிரிவு 354(C),506(1) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் படி எதிரி குற்றவாளி இல்லையென்று தீர்மானித்து, இவ்வழக்கிலிருந்து எதிரியை கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**12.** இவ்வழக்கில் (வ.சொ. எண்.91/2025 தேதி.13.05.2025)வழக்கு சொத்தான VIVO 1714 Model cell phoneஐ மனுதாரர்/எதிரியிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி விசாரணை காலத்தில் எழுதிக்கொடுத்த பிணைய பத்திரங்கள் இத்துடன் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து- தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 03ம் நாள் வெள்ளிக்கிழமை இந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2.
பொன்னேரி.

**அட்டவணை**

**அரசு சாட்சிகள்**

| **அ.சா.எண்** | **அரசு சாட்சிகள்** | **சாட்சிகளின் விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | புவனேஷ்வரி | புகார்தாரர் சாட்சி |
| அ.சா.2 | சுமன் | பிறழ் சாட்சி |
| அ.சா.3 | மின்னலா | பிறழ் சாட்சி |
| அ.சா.4 | சரவணன் | பிறழ் சாட்சி |
| அ.சா.5 | கிளாஸ்டின் டேவிட் | புலன் விசாரணை அதிகாரி |

TNTR270027812025

**அரசு சான்றாவணங்கள்** (9)

நீதிமன்ற படிவ எண். 68

சான்றாவணங்களின் பட்டியல்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொன்னேரி

| சான்றாவண வரிசை .எண். | சான்றாவண விவரம் மற்றும் அதனுடைய நாள் | சான்றாவணம் எப்போதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதோ அந்த நாள் | எப்படி குறியிடப்பட்டது | எவரால் குறியிடப்பட்டது | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் | 12.05.2026 | அ.சா.ஆ.1 | புவனேஷ்வரி (அ.சா.1) | – |
| 2 | முதல் தகவல் அறிக்கை | 25.05.2026 | அ.சா.ஆ.2 | கிளாஸ்டின் டேவிட் (அ.சா.5) | – |
| 3 | மாதிரி வரைபடம் | 25.05.2026 | அ.சா.ஆ.3 | கிளாஸ்டின் டேவிட் (அ.சா.5) | – |
| 4 | பார்வை மகஜர் | 25.05.2026 | அ.சா.ஆ.4 | கிளாஸ்டின் டேவிட் (அ.சா.5) | – |
| 5 | படிவம் 91 | 25.05.2026 | அ.சா.ஆ.5 | கிளாஸ்டின் டேவிட் (அ.சா.5) | – |
| 6 | தடய அறிவியல் அறிக்கை | 25.05.2026 | அ.சா.ஆ.6 | கிளாஸ்டின் டேவிட் (அ.சா.5) | – |

**அரசு சான்றுபொருட்கள் – இல்லை.**

**எதிரி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் – இல்லை**

**குறிப்பு–**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு காவலர் மூலம் தெரிவிக்கப்பட்டது.

2.எதிரிகள் பிணையிலிருந்தார்.

3. எந்த ஒரு சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

நீதித்துறை நடுவர் எண். 2.

பொன்னேரி.